## அதியுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபை - 2013

அதியுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, தேறிய சொத்திலுள்ள மாற்றங்களின் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 50 ஆம் இலக்க அதியுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபை அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதியுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள்

நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், வழங்கலிற்காக அனுமதிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் முதலாவது தொகுதியில் முன்னைய காலப்பகுதித் தவறுகள் பொருந்தக்கூடியவாறு பதிவொன்று திருத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், சபையானது நியமத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அவர்களுடைய மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் முன்னைய 4 ஆண்டு காலப்பகுதி தொடர்பான ரூபா 318,661 தொகையான முன்னைய காலப்பகுதிக்கான தவறுகள் சீராக்கியிருந்தது.

(ஆ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அதன் பயன்பாட்டிற்கு கிடைத்த போதே மதிப்பிட ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த வேண்டுகைக்கு முரணாக சபையானது சொத்துக்களின் விற்பனை ஆண்டில் முழுமையான பெறுமானத் தேய்வும் கொள்வனவு செய்த ஆண்டில் சாட்டுதல் செய்யப்படாமலும் இருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மூலதன மானியம் நிதிக்கூற்றுக்களில் செலவு மீதியாக இருக்க வேண்டிய போதிலும், ரூபா 321,083,080 தொகையான மூலதன மானியம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வரவு மீதியாகக் காட்டப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நிதிப்பிரமாணம் | |
| i. நிதிப்பிரமாணம் 133(1)(அ) | நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சபையால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ii நிதிப்பிரமாணம் 1646 | படிவ இல 267 பயன்படுத்தி வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 1990 ஒக்தோபர் மாதத்தின் 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகக் சுற்றறிக்கை | ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒரு தடைவ மோட்டார் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்ட பாதீட்டில் பாதிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றும் நிதி நிலமைக் கூற்றும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) வருடாந்த பாதீடானது அடுத்து வரும் ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் 15 நாட்களிற்கு பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இது 2013 சனவரி 30 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 11,497,626 நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 18,382,575 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்தமையால், ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 6,884,949 ஆன மேலுமொரு வீழ்ச்சியைக் காண்பித்தது. ரூபா 10,977,765 ஆல் மீண்டெழும் செலவினங்களிற்கான அரசாங்க மானியங்களின் அதிகரிப்புடன் ஒப்பிடும் போது ரூபா 17,862,714 ஆல் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் இந்த வீழ்ச்சிக்கான பிரதானமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

ஆண்டுதோறும் பற்றாக்குறையின் தொடர்ச்சியான அதிகரிப்பு சபையின் திரட்டு நிதியத்தை பாதகமாகப் பாதித்திருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறான பற்றாக்குறை மற்றும் திரட்டு நிதிய மீதி கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பற்றாக்குறை | திரண்ட நிதியத்திற்கான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| 2013 | 18,392,274 | (321,083,080) |
| 2012 | 11,915,862 | (197,936,899) |
| 2011 | 2,483,781 | (79,475,324) |
| 2010 | 894,478 | 43,330,279 |
| 2009 | 2,919,119 | 47,560,636 |

சபையானது 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 18,392,274 பற்றாக்குறையை அடைந்திருந்துடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் போது பற்றாக்குறையின் விரைவான அதிகரிப்பு காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 141,538,454 ஆன எதிர்மறையான சொத்து நிலமையாக இருந்தது. ஆதலால், பொதுத் திறைசேரியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்காதவையாக தொடருவதற்கு சபையின் ஆற்றல் ஐயத்திற்கிடமாக உள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கட்டிடத் தொகுதியின் பொது வசதிகளை உயர்த்துவதற்கு அவசியமாக இருக்க வேண்டிய மேலதிகங்கள், திருத்தங்கள் மற்றும் முன்னேற்றங்கள் உள்ளடங்கலான உயர்நீதிமன்ற கட்டிடத் தொகுதி மற்றும் கட்டிடங்களின் கட்டுப்பாடு, நிர்வாகம், முகாமை மற்றும் பராமரிப்பு என்பவற்றிற்கு 1987 இன் 50 ஆம் இலக்க உயர்நீதி மன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபை அதிகாரசபையின் கீழ் முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 121 மில்லியன் மொத்த செலவில் ரூபா 9 மில்லியன் மாத்திரமே அந்த பிரதான நோக்கங்களை செயற்படுத்துவற்கு செலவழிக்கப்பட்டிருந்தது.

### 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

அ) உரிய திகதிகளில் மின்சார பட்டியல் கொடுப்பனவு செய்யாததன் விளைவால் வட்டியாக ரூபா 187,191 தொகை செலுத்தப்பட்டது.

ஆ) மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைக் கொடுப்பனவு கணிப்பீட்டிலுள்ள தவறின் விளைவால் மிகைக் கட்டணமாக ரூபா 257,467 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஎடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 30 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

**5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு இல்லாதிருந்ததுடன் நீதித்துறை அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் சபை பங்குபற்றியது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு